14.12.2021 டி.வி.சி. 201 /2020 RW1.பிரேம்குமார்

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி 1 மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கும், மனுதாரருக்கும் 29.06.2014ம் தேதி திருமணம் நடைபெற்றது. திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு சீரும், சிறப்புமாக நடைபெற்றது என்றால்சரிதான். திருமணத்தின்போது மனுதாரருக்கு சீதனமாக பீரோ, கட்டில்,மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் ரூ.2 லட்சம் மதிப்பிற்கு செய்தார்கள் என்றால் சரியல்ல. திருமண செலவிற்காக மனுதாரர் வீட்டிலிருந்து எங்களுக்கு ரூ.50 ஆயிரம் கொடுத்தார்கள் என்றால் இல்லை. மனுதாரருக்கு திருமணத்தின்போது 10 பவுன் தங்க நகையும், 1ம் எதிர்மனுதாரருக்கு 1 பவுன் தங்க செயினும், 1/2 பவுன் மோதிரமும் போட்டார்கள் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்று தெரியாது. எனக்கு 1 பவுனில் தங்க செயின் போடவில்லை. 1/2 பவுன் மோதிரம் போட்டார்கள். அது என் விரலுக்கு சரியாக இல்லை என்று அவர்களே திருப்பி வாங்கி கொண்டார்கள். நான் இருசக்கர வாகனம் வாங்கி கொள்வதற்கு ரொக்கமாக ரூ. 50 ஆயிரம் கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு என் பெற்றோர் வீட்டில் நானும், மனுதாரரும் வசித்து வந்தோம் என்றால் சரிதான். திருமணம் முடிந்து நான் எந்த வேலைக்கும் செல்லாமல் நான் வீட்டில் இருந்து வந்தேன் என்றால் சரிதான். என் வீட்டில் என் பெற்றோர்களுக்கு சொந்தமாக வீடும், நிலமும் இருந்ததாலும், அதில் வாடகை வருமானம்வந்ததாலும், வசதியாக இருந்ததால் நான் வேலைக்கு செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வசதியாக வாழ்ந்து வந்தேன் என்றாலும், மனுதாரருக்கு போதுமான வசதி இல்லை என்றாலும், அதனால் மனுதாரரிடம் வரதட்சணை கேட்டு கொடுமை செய்தேன் என்றால் சரியல்ல. திருமணம் முடிந்து மனுதாரர் ஆடி மாதம் என்பதால் அவர் பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரிதான். ஆடிமாதம் என்பதால் பொதுவாக கணவன், மனைவியை பிரித்து வைப்பார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மற்ற எதிர்மனுதாரர்களுக்கு தெரியாமல் என் மனைவியை ரகசியமாக சென்று பார்த்து வருவேன் என்றால் சரியல்ல. எனக்கு முதல் குழந்தை எப்போது பிறந்தது என்றால் 18.04.2015 ல் சித்தேஷ் என்ற ஆண் குழந்தை பிறந்தது. திருமணமாகி 10 ம் மாதத்தில் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு நானும், மனுதாரரும் நல்ல முறையில் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். மனுதாரர் மனைவி என்ற முறையில் தன் கடமைகளை செய்து வந்தார் என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது மனைவி என்னுடன் உடலுறவு வைத்து கொள்ளவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், பெரியவர்களிடம் பேசிய பிறகுதான் என்னுடன் உடலுறவு வைத்து கொண்டார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் குழந்தை பிறந்து 6 மாதம்

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்.

கழித்து மனுதாரர் என் வீட்டிற்கு வந்தார். பின்னிட்டு என் மனைவி இரண்டாவது முறை கர்ப்பமானார் என்றால் சரிதான். மனுதாரர் 2 வது முறை கர்ப்பமாக இருந்தபோது அவரது தாயார் பரிசோதனைக்கு அழைத்து சென்றார். மனுதாரர் குழந்தை பிறந்த 6 வது மாதத்தில் மீண்டும் கர்ப்பமானதால் மனுதாரரின் கருவை கலைக்கும்படி நானும், மற்ற எதிர்மனுதாரர்களும் வற்புறுத்தினோம் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு கருவை கலைத்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று மருத்துவர் சொன்னதால் மனுதாரரை கரு கலைய விடாமல் செய்து விட்டோம் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர் நான் சொன்னதை கேட்காததால் மனுதாரரின் முதல் குழந்தை மீது கோபப்பட்டு அவரை அடித்து காலை உடைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அதன்பிறகு மனுதாரர் குழந்தை அழுவதை பார்த்து சந்திரசேகர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று குழந்தைக்கு நுண்கதிர் படம் எடுத்து பார்த்து கால் உடைந்ததற்கு சிகிக்சையளித்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு தொலைபேசியின் மூலம் தகவல் சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது முதல் குழந்தையை நானே காலை உடைத்து விட்டு எதுவும் தெரியாதது போல் மனுதாரரிடம் நடந்துகொண்டேன் என்றால் சரியல்ல. எனது 2 வது பெண் குழந்தையான ரித்திகா என்பவர் 06.09.2016 ல் பிறந்தார். மேற்படி குழந்தையை கருவில் இருக்கும்போதே நான் கலைக்க சொன்னேன் என்றாலும், அவ்வாறு மனுதாரர் செய்யாததால் நான் குழந்தையை பிறந்தபோது நான் சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் டி.என்.பி.எல்லிலும், RRP நிறுவனத்திலும் பணி செய்தேன் என்றால் சரிதான். நான் மாதம் ரூ.30 ஆயிரம் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.12 ஆயிரம் சம்பாதித்து வந்தேன். நான் நல்லமுறையில் சம்பாதித்து வருகிறேன் என்றாலும், நான் நல்லமுறையில் இருந்தபோதிலும், ஒரு கணவனாக, மனைவியை பராமரிக்காமலும், ஒரு தந்தையாக குழந்தைகளையும் பராமரிக்காமலும், என்னுடைய சுய செலவை மட்டும் பார்த்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பெண் குழந்தை பிறந்ததால் மனுதாரரை உடலளவிலும், மனதளவிலும் வன்கொடுமை செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

மனுதாரருக்கு பெண் குழந்தை பிறந்ததாலும், மேற்படி குழந்தைக்கு சீர்வரிசை செய்யவேண்டும் என்பதாலும், என் சொத்தில் பெண் குழந்தைக்கு பங்கு கொடுக்கவேண்டும் என்பதாலும், மனுதாரரையும் அவரது குழந்தைகளையும் நான் என் வீட்டை விட்டு அடித்து துரத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரரையும், குழந்தைகளையும் அடித்து துரத்தியதால் தான் மனுதாரர் 108 ஆம்புலன்சிஸ் தினக்கூலியாக பணியில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. மனுதாரரின் குழந்தைகளான சித்தேஷ், மற்றும் ரித்திகா மீனாட்சி பள்ளி கரூரில் படித்து வருகிறார்கள். 6 மாதத்திற்கு ஒரு முறை இருவருக்கும் கல்வி கட்டணமாக தலா ரூ.10 ஆயிரம் செலுத்தி வருகிறேன். எனது மகன் மற்றும் மகள் 1ம்வகுப்பு படித்து வருகிறார்கள். 23.06.2020ம் தேதியில் மனுதாரர் பணியில் இருந்தபோது வயிற்றில் வலி ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

Sd/-R.Sujatha,

நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்.

சிகிச்சையின்போது மனுதாரரின் கர்ப்பப்பையில் கட்டி இருந்து அறுவை சிகிச்சை மூலமாக நீக்கம் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. நான் மனைவியோடு நல்ல முறையில் குடும்பம் நடத்தியிருந்தால் மனுதாரருக்கு ஏற்பட்ட சிகிச்சை குறித்து எனக்கு தெரியும் என்றாலும், நான் நல்ல முறையில் நடக்காததால் தான் மேற்படி விவரங்களை தெரியவில்லை என்றால் சரியல்ல. கரூர் மாவட்ட குடும்ப நல நீதிமன்றத்தில் நான் விவாகரத்து கோரி மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் அவர் அம்மாவீட்டிற்கு சென்றபோது அவருடன் சேர்ந்து வாழ நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எனக்கு நல்ல மனைவியாக இருந்தபோதிலும், மனுதாரரை நான் வேண்டுமென்றே புறக்கணித்து விட்டு , வேறு வசதியான பெண்ணை திருமணம் செய்வதற்காகவும் தான் மனுதாரரின் நடத்தையின் மீது தவறாக சித்தரித்து கூறிவிட்டு தற்போது மனுதாரருக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பானருக்கு கோயம்பள்ளி கிராமத்தில் சுமார் 1 ஏக்கர் பூமி உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பூமியின் மூலமாக வருடத்திற்கு ரூ.1 லட்சம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. என் தகப்பனார் நடத்துனராக வேலை செய்து ஓய்வு பெற்று விட்டார். மாதம் ரூ. 50 ஆயிரம் பென்சன் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆடு, மாடு வளர்ப்பதன் மூலமாகவும், மாதம் ரூ. 20 ஆயிரம் சம்பாதித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனக்கு கங்கா நகரில் 3 வீடுகள் உள்ளது என்றால் இல்லை. மேற்படி வீடுகளின் மூலமாக மாதம் ரூ.15 ஆயிரம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. திருமாநிலையூரில் 2 வீடுகள் உள்ளது என்றாலும், அதன் மூலமாக ரூ.10 ஆயிரம் வருமானம் வருகிறது என்றால் சரியல்ல. எனக்கு மாதம் தோராயமாக ரூ.1 லட்சம் வருகிறது என்றால் சரியல்ல. அதனால் தான் எந்த வேலைக்கும் செல்லாமல் வசதியாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் நல்ல வசதியான நிலையில் இருந்தும், மனுதாரரையும், அவரது குழந்தைகளையும் பராமரிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் மனுதாரரையும், அவரது குடும்பத்தார் மீதும், பொய்யான குற்றசாட்டுகளை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் மனுவில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் மனுதாரருக்கு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கரூர்.